OS 50/2021

பி.வா.சா.1 சந்திரன் த/பெ பெருமாள்

நாள் 30.10.2025

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவாவில் குறிப்பிட்டுள்ள உறவு முறை மற்றும் சொத்து விவரங்கள் சரியானவை என்றால் சரிதான். அம்மாக்கண்ணு எனது அத்தை ஆவார் அவர் எனது தங்கை ராஜேஸ்வரிக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்துகளுக்கு எனது அப்பா பெருமாள் பெயரில் வா.சா.ஆ.4 ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.87/2A 4 ஏர்ஸ் கூட்டு பட்டா ஏற்பட்டுள்ளது என்றாலும் அது வா.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். எனது அப்பா பெருமாள் 24.12.1996ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது அம்மா கமலா அம்மாள் 21.03.2016ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது அப்பா பெருமாளுக்கு 2 முதல் 5 வாதிகள் மற்றும் நானும் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துகள் எனது தகப்பனார் பெருமாள் வா.சா.ஆ.1 மூலம் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். தாவா 5, 6 அயிட்ட சொத்துகள் எனது தகப்பனார் பெயரில் வா.சா.ஆ.2ன் மூலம் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் நான் தான் எனது அப்பா பெயரில் கிரையம் வாங்கினேன்.

2. வா.சா.ஆ.2 மூலம் கிரையம் வாங்கிய சொத்துகளுக்கு நான் தான் பணம் கொடுத்தேன் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை நான் மூத்த மகன் நான் தான் பணம் அனுப்பினேன். வா.சா.ஆ.2ல் சந்திரன் ஆகிய நான் தான் பணம் கொடுத்தேன் என்று வாசகம் இருக்கிறதா என்றால் இல்லை. ஆனால் நான் தான் பணம் கொடுத்தேன். எனது மனைவியான 2ம் பிரதிவாதி விஜயா என்பவரை எங்கள் தரப்பில் சாட்சியாக விசாரிக்க இருக்கிறேனா என்றால் இல்லை. எனது அப்பா பெருமாள் உயிருடன் இருக்கும் போது எனது மனைவி விஜயா பெயரில் 26.06.1991ல் தாவா 1, 2 அயிட்ட சொத்துகளை அடமானம் போட்டார் என்றால் சரிதான். தாவா 4வது அயிட்ட சொத்தை 1ம் வாதி ராஜேஸ்வரி எனது பெயருக்கு ரூ.5,000/-க்கு அடமானம் போட்டார் என்றால் சரிதான். மேற்படி 2 அடமான அசல் பத்திரங்களும் யாரிடம் உள்ளது என்றால் எனது தங்கை ராஜேஸ்வரி வாங்கி சென்றுவிட்டார்.

3. 2 அடமான கடன் பத்திரங்களுக்கு உண்டான அசல் மற்றும் வட்டியை ராஜி என்பவர் முன்னிலையில் எனது தகப்பனார் இறந்த பிறகு 2001ல் எனக்கு திருப்பி செலுத்திவிட்டார்கள் என்றால் இல்லை. பணத்தை திருப்பி கொடுத்துவிட்டதால் தான் நான் 2 அசல் பத்திரங்களையும் திருப்பி கொடுத்துவிட்டேன் என்றால் இல்லை பணம் கொடுப்பதாக சொல்லி பத்திரங்களை எனது மகனிடம் வாங்கி சென்றார்கள். பணம் கொடுக்காமல் எனது மகனிடம் இருந்து 2 பத்திரங்களை வாங்கி சென்றுவிட்டார்கள் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை. அடமான கடன் பத்திரங்களின் பெயரில் கடன் தொகையை வசூல் செய்ய வழக்கு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பில் சர்வே எண்.292/2Bல் உள்ள 10 செண்ட் நிலம் யாருடையது என்றால் எனது அம்மா பெயரில் உள்ளது. மேற்படி 10 செண்ட் நிலம் வாங்குவதற்கு எனது அப்பா பெயரில் ஏற்பட்டதாக சொல்லும் கிரைய ஒப்பந்தத்தை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

4. மேற்படி 10 செண்ட் சம்மந்தமாக வழக்கு ஏதேனும் நடந்ததா என்றால் இல்லை. மேற்படி 10 செண்ட் இடம் எனது அம்மா பெயரில் உள்ள கிரையப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. 10 செண்ட் இடம் பாஸ்கரன் பெயரில் கிரையம் ஏற்பட்டுள்ளது என்றாலும் அவர் வெளியூரில் இருந்ததால் எனது அம்மா பொது அதிகார முகவர் என்ற பேரில் வழக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த வழக்கு எண்.132/1997 என்றால் சரிதான். அந்த வழக்கின் மூலம் நீதிமன்றம் மூலம் பாஸ்கரன் பெயருக்கு கிரையம் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 10 செண்ட்டில் பாஸ்கரனுக்கு மட்டும் உரிமை உள்ளது எங்களுக்கு பாகம் இல்லை என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்த நபரோ அல்லது அந்த முகவரோ இறந்துவிட்டால் பொது அதிகாரம் செல்லாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொது அதிகாரம் எழுதி கொடுக்கப்பட்ட எனது தாயார் இறந்துவிட்டதால் சொத்து பாஸ்கரனுக்கு மட்டும் உரிமையானது என்றால் சரியல்ல.

5. பி.வா.சா.ஆ.8 ஆவணம் மூலம் 28.06.2010ல் 1, 3, 4 வாதிகள் தரப்பில் எனக்கும் மோகன் என்பவருக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதற்கு நானும் எனது தாயார் கமலா அம்மாளும் சேர்ந்து 16.07.2010ல் பி.வா.சா.ஆ.9 பதில் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த பதில் அறிவிப்பில் கடைசி பத்தியில் அடமான கடன் தொகையும் மற்றும் நான் செலவு செய்து ரூ.1,50,000/- கொடுத்து விட்டு பாகம் எடுத்துக்கொள்ளுங்கள் என்று விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.10 கடனை அதே வருடத்தில் பைசல் செய்துவிட்டேன். பி.வா.சா.ஆ.11 கடனை அதே வருடத்தில் 3 மாதங்கள் கழித்து பைசல் செய்தேன். எனது பதில் அறிவிப்பில் மேற்படி 2 கடன் விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது எதிர் வழக்குரையில் மேற்படி 2 கடன் விவரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. மேற்படி பி.வா.சா.ஆ.10, 11 பாண்டுகள் வழக்கிற்காக இந்த வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. அதனால் தான் எனது பதில் அறிவிப்பிலும் எனது எதிர் வழக்குரையிலும் மேற்படி 2 பாண்டுகள் குறித்து விவரம் கூறவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.12 கிரையப்பத்திரத்தின் கமலா பொது அதிகார முகவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் பாஸ்கரன் பெயருக்கு கிரையம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். மேற்படி 10 செண்ட் இடம் பாஸ்கரனின் தனிப்பட்ட சொத்து என்றாலும் எங்களுக்கு பாகம் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா 4வது அயிட்ட சொத்து ராஜேஸ்வரிக்கு பாத்தியப்பட்ட தனி சொத்து என்றாலும் அதில் யாருக்கும் பாகம் இல்லை என்றாலும் சரியல்ல. பெருமாளின் வாரிசுகள் என்ற முறையில் வாதிகளுக்கு தாவா சொத்துகளின் பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.